# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், சென்னை-8.

## இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு 2019

**விளம்பர எண். 1/2019** நாள்.06.03.2019

I கீழ்க்காணும் தகுதிகள் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படை- பெண் மற்றும் திருநங்கை), இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (ஆண்) இரண்டாம் நிலை சிறைக் காவலர் (ஆண் மற்றும் பெண்) மற்றும் தீயணைப்பாளர் (ஆண்) பதவிகளுக்கு இணையவழி வாயிலாக மட்டுமே விண்ணப்பங்கள் (online application) வரவேற்கப்படுகின்றன.

II **தகவல் சிற்றேட்டினை பதிவிறக்கம் செய்தல்:**

இத்தேர்வுக்குரிய முழுவிவரங்கள் அடங்கிய தகவல் சிற்றேடு (Information Brochure) இக்குழும www.tnusrbonline.org இணையதளத்தில் பதிவேற்றம் (Upload) செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் இத்தகவல் சிற்றேட்டினை பதிவிறக்கம் (Download) செய்து அதனை கவனமாக படித்து அதில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

III **இணைய வழி விண்ணப்பம் :**

விண்ணப்பதாரர்கள் இக்குழும www.tnusrbonline.org இணையதளத்தின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஏனைய இதர வழிகளான விண்ணப்பப்படிவம் மற்றும் தட்டச்சுப் படிவம் மூலமாக விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

IV **காலிப்பணியிடங்கள்: 8826.**

துறை வாரியான காலிப்பணியிடங்கள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

| துறை | பதவி | ஆண்கள் | பெண்கள்/ திருநங்கைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட/மாநகர ஆயுதப்படை) | -- | 2465 (பெண்கள்/ திருநங்கைகள் | 2465 |
| | இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை | 5962 | -- | 5962 |
| சிறைத்துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 186 | 22 (பெண்கள்) | 208 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 191 | -- | 191 |

இது தவிர 62 பின்னடைவு காலிப்பணியிடங்கள் [ஆயுதப்படை-7, சிறைத்துறை-12 மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை -43 பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்) வகுப்பினருக்கான பின்னடைவு காலிப்பணியிடங்கள்].

V **ஊதிய விகிதம் :** ரூ.18200 - 52900

VI **கல்வித் தகுதி**:

(a) **10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

(b) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாமல் அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதியினைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(c) விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும். இல்லையெனில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தமிழ்த் தேர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து இரண்டாண்டுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

VII **விண்ணப்பதாரர்களுக்கான வயதுத் தகுதி**:

| | | |
|---|---|---|
| 1. | பொதுப் பிரிவினர் | 01.07.2019 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.<br>(01.07.1995-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)<br>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 01.07.2019 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்<br>(01.07.1993-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்), |
| 3. | ஆதிதிராவிடர்<br>ஆதிதிராவிடர் (அருந்ததியர்)<br>பழங்குடியினர் | 01.07.2019 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.<br>(01.07.1990-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| 4. | ஆதரவற்ற விதவைகள் | 01.07.2019 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.<br>(01.07.1984-லிருந்து 01.07.2001-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |

| | | |
|---|---|---|
| 5. | முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | 01.07.2019 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1974 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்). |

VIII **வகுப்புவாரி இடஒதுக்கீடு:**

a) தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் அரசாணைகளின்படி வகுப்புவாரி இடஒதுக்கீடு கீழ்காணுமாறு பின்பற்றப்படும்:-

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5% |
| பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் (இஸ்லாமியர்) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் | 20% |
| ஆதிதிராவிட வகுப்பினர் | 15% |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினர் | 3% |
| பழங்குடியின வகுப்பினர் | 1% |

b) தமிழ்நாட்டைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும் வகுப்புவாரி ஒதுக்கீட்டில் பரிசீலிக்கப்படுவார்கள்.

c) ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர், தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தெரிவு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அப்பதவியிடங்கள் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினரில்லாத பிற ஆதிதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

IX **சிறப்பு ஒதுக்கீடுகள்:**

A) **விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு:**

1) இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்பாளருக்கான மொத்தக் காலிப் பணியிடங்களில் 10% பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும்.

2) விளையாட்டுக்கான 10% ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பொது விண்ணப்பதாரர்களைப் போலவே எழுத்துத் தேர்வு மற்றும் அதனைத் தொடர்ந்து பிற போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.

3) இவ்விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட 15 விளையாட்டுப் போட்டிகளில்

ஏதேனும் ஒன்றில் பங்கேற்றதற்கான படிவம் I அல்லது படிவம் II அல்லது படிவம் III-ஐ பெற்றிருக்க வேண்டும்.

4) **அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | கூடைப்பந்து | 9. | ஜிம்னாஸ்டிக்ஸ் |
| 2. | கால்பந்து | 10. | ஜூடோ |
| 3. | ஹாக்கி | 11. | பளு தூக்குதல் |
| 4. | கையுந்துபந்து | 12. | நீச்சல் போட்டி |
| 5. | கைபந்து | 13. | தடகள போட்டிகள் |
| 6. | கபடி | 14. | குதிரையேற்றம் |
| 7. | மல்யுத்தம் | 15 | துப்பாக்கி சுடுதல் |
| 8. | குத்துச்சண்டை | | |

5) அங்கீகரிக்கப்பட்ட 15 விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றில் இவ்விளம்பர தேதிக்கு முன்னர் 5 ஆண்டுகளுக்குள் விளையாட்டில் கலந்துகொண்டு விளையாட்டுப் படிவம் I/ படிவம்II-ஐ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அல்லது தமிழ்நாடு ஒலிம்பிக் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கழகங்கள் அல்லது இந்திய தேசிய ஒலிம்பிக் ஆணையத்தின் மூலம் கலந்து கொண்டு பெற்றிருப்பவர்கள் மற்றும் விளையாட்டுப் படிவம்-IIIஐ கல்லூரி முதல்வர், இயக்குநர் பல்கலைக் கழக/ கல்லூரி விளையாட்டு பொறுப்பு அதிகாரியிடமிருந்து, இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலனை செய்யப்படுவார்கள்.

6) விளையாட்டுப் படிவம் I /படிவம் II /படிவம் III-ஐ இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யாமல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விளையாட்டுப் படிவங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

B) **முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்:**

1) இத்தேர்வில் 5% முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்களுக்கு ஒதுக்கப்படும்.

2) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

3) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் இணையவழி விண்ணப்பத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழை (Discharge certificate) பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யத் தவறினால் இவ்வொதுக்கீட்டின் கீழ்

பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

4) இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அவர்களது சுயஉறுதிமொழியுடன் கூடிய தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் ஓய்வு பெறும் தேதி குறிப்பிட்ட சான்றிதழ் பெற்று அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யத் தவறினால் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

(மாதிரிச் சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது)

5) முன்னாள் இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏதேனும் அரசுப் பணியில் பணியமர்த்தப்பட்டிருந்தால் இத்தேர்வில், அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சலுகையினைக் கோர இயலாது.

C) **ஆதரவற்ற விதவை (Destitute Widow)**:

1) பெண்கள் மற்றும் திருநங்கையினருக்கான காலிப் பணியிடங்களில் 3% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.

2) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை வருவாய் கோட்ட அலுவலர் (RDO)/ சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் ஆதரவற்ற விதவைக்கான ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது.

(மாதிரிச் சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது).

3) சிறப்பு ஒதுக்கீட்டிற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி அதே வகுப்பைச் சேர்ந்த பிற பெண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

X **பத்தாம் வகுப்பு கல்வியினை தமிழ் பயிற்றுமொழியில் பயின்றவர்களுக்கான 20% முன்னுரிமை:**

a) பத்தாம் வகுப்பு கல்வியினை தமிழ் பயிற்றுமொழியில் (Medium of Instruction) பயின்றவர்களுக்கு இறுதித் தெரிவின் போது அதாவது தற்காலிகத் தெரிவுப் பட்டியல் தயாரிக்கும் பொழுது மட்டும் 20% முன்னுரிமை அளிக்கப்படும்.

b) விண்ணப்பதாரரின் 10ம் வகுப்பு பள்ளி மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) / பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் பயிற்று மொழி (Medium of Instruction) தமிழ் என்று இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதிருந்தால், விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பு பயின்ற கல்வி நிலையத்திலிருந்து தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணையவழி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

c) விண்ணப்பதாரா் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியினை தனித்தோ்வா் (Private) வழியில் பயின்று தோ்ச்சி பெற்றிருந்தால் அவா் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழை மாநில பள்ளித் தோ்வுகள் குழுமம் (இடைநிலை), அரசு தோ்வுகள் துறை, தமிழ்நாடு, சென்னை-6 (State Board of School Examinations (Secondary), Department of Government of Examinations, Tamil Nadu, Chennai-6), அலுவலகத்திலிருந்து பெற்று பதிவேற்றம் செய்திடல் வேண்டும். இவ்வாறு உரிய சான்றிதழ் பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரா்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாா்கள்.

d) இத்தோ்வுக்குரிய கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தோ்ச்சி என்பதால் விண்ணப்பதாரா் பத்தாம் வகுப்பில் தமிழ்வழி பயிற்றுமொழியில் பயின்றுள்ளாா் என்பதற்கான சான்றிதழை பதிவேற்றம் செய்திருந்தால் மட்டுமே 20% முன்னுரிமையில் பரிசீலினை செய்யப்படுவாா்.

e) இவ்வாறு உரிய சான்றிதழை பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரா்கள் இறுதித் தெரிவின் போது (Provisional Selection List) 20% முன்னுரிமை அடிப்படையின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாா்கள்.

f) விண்ணப்பதாரா் பத்தாம் வகுப்பில் தமிழ்வழியில் பயின்றதற்கான சான்றிதழை இணைக்காமல் மேல்நிலை வகுப்பினை (HSC) அல்லது பட்டப் படிப்பினை (Degree) தமிழ்வழியில் கற்றதற்கான சான்றிதழைச் சமா்ப்பித்தால் அச்சான்றிதழ் 20% முன்னுரிமை அடிப்படையின் கீழ் பரிசீலினைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

XI **திருநங்கைகள் (Transgenders) :**

a) திருநங்கைகள், ஆண் அல்லது பெண் அல்லது மூன்றாம்பாலினம் என ஏதேனும் ஒன்றினை தனது பாலினமாக தோ்வு செய்துகொள்ளலாம். திருநங்கைகள் மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பம் செய்தால் தங்களது விண்ணப்பத்துடன், தமிழ்நாடு அரவாணிகள் (திருநங்கைகள்) நலவாரியத்திலிருந்து பெறப்பட்ட அடையாள அட்டையினைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
(மாதிரி அடையாள அட்டை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது).

b) திருநங்கைகள், ஆண் பாலினத்தை தோ்வு செய்தால் ஆண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தோ்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும், பெண் அல்லது மூன்றாம் பாலினத்தை தோ்வு செய்தால் பெண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தோ்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும் கலந்து கொள்ளவேண்டும்,

c) திருநங்கைகள், மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பித்தால், இவா்கள் பாலினத்தில் பெண் விண்ணப்பதாரா்களாகப் பாவிக்கப்படுவாா்கள்.

d) திருநங்கைகள், தனது சாதிக்குரிய சாதிச் சான்றிதழை சமா்ப்பித்தால், அவா்கள் பிற விண்ணப்பதாரா்களைப் போன்று அவரவா் வகுப்புவாரி ஒதுக்கீடு பெறலாம்.

e) திருநங்கைகள், சாதிச் சான்றிதழ் சமா்ப்பிக்காவிடில் அவா்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகப் பாவிக்கப்படுவா்.

XII **பதவி முன்னுரிமை (Post Preference) :**

| | |
|---|---|
| (a) i | பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் ஆயுதப்படை (AR) காவலர் பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| ii. | ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (TSP) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| iii. | ஆண், மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள் சிறைக்காவலா் (JW) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| iv. | ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே தீயணைப்பாளர் (Firemen) பதவிக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| v. | திருநங்கை விண்ணப்பதாரர்கள் சிறைக்காவலா் (JW) பதவிக்கு முன்னுரிமை அளிக்க தகுதியற்றவர்கள். |
| vi. | பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் இரண்டாம் நிலை காவலர் (TSP) பதவிக்கு முன்னுரிமை அளிக்க தகுதியற்றவர்கள். |

(b) i) விண்ணப்பதாரா் மேலே வரிசை எண்.XII (a)-வில் கூறப்பட்டுள்ளபடி, இணைய வழி விண்ணப்பத்தில் தொகுதி-8ல் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவிகளுள் ஒரு பதவியையோ ஒன்றுக்கு மேற்பட்ட பதவியையோ தேர்வு செய்யலாம். அவ்வாறு ஒருவா் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை (AR/TSP / Jail Warder / Fireman) தேர்வு செய்யும் பொழுது தனது விண்ணப்பத்தில், தான் நியமிக்கப்பட விரும்பும் பதவிகளை முன்னுரிமை வரிசைப்படி தெரிவு செய்ய வேண்டும்.

ii) இறுதி தற்காலிகத் தெரிவு பட்டியல் தயாரிக்கும் வேளையில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படத் தகுதி வாய்ந்தவராகக் காணப்பட்டால், அவரது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் பதவி முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொள்ளப்படும்.

iii) விண்ணப்பத்தில் தேர்வு செய்திருக்கும் பதவி முன்னுரிமையே இறுதியானது. பின்னா் கோரப்படும் பதவி முன்னுரிமை பற்றிய எந்த முறையீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv) விண்ணப்பதாரர்கள் பதவி முன்னுரிமையில் ஒரு பதவியை மட்டும் தேர்வு செய்துவிட்டு, மற்ற பதவிகளுக்கு முன்னுரிமை குறிப்பிடப்படவில்லையெனில் அவர்கள் மற்ற பதவிகளுக்குத் தேர்வு செய்யும் வாய்ப்பை இழக்க நேரிடுவார்கள்.

(c) இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு தாங்கள் விரும்பும் பதவிக்கான (AR/TSP/ Jail Warder/ Fireman) விருப்பத்தினை முன்னுரிமைப்படி வரிசைகிரமமாக தவறாமல் நிரப்ப வேண்டும். விண்ணப்பதாரா், அவா் விரும்பும் பதவிக்கு கொடுத்துள்ள முன்னுரிமை மற்றும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்.

(d) விண்ணப்பதாரர்கள் பிற பதவிக்கான மதிப்பெண் பெற்றிருந்தாலும் முன்னுரிமை தெரிவித்த முதல் பதவிக்கே தெரிவு செய்யப்படுவார்கள். பின்னா் கோரும்

எந்தவிதமான பதவி மாற்ற வேண்டுதல், எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

XIII **தேர்வு முறைகள்**: இத்தேர்வானது கீழ்க்காணும் தேர்வு நிலைகளின்படி நடத்தப்படும்.

| வ. எண் | தேர்வு நிலைகள் | மதிப்பெண்கள் | விவரம் |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வு | 80 மதிப்பெண்கள் | எழுத்துத் தேர்வில் பொது அறிவு மற்றும் உளவியல் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.<br>முழுமையான விவரம் வரிசை எண்.XIV-ல் அளிக்கப்பட்டுள்ளன. |
| 2. | உடற்கூறு அளத்தல் | இல்லை | உடற்கூறு அளத்தல் தகுதித் தேர்வேயாகும்.<br>முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ மற்றும் துணை இராணுவப் படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு இல்லை.<br>உடற்கூறு அளத்தல் முழுமையான விவரம் வரிசை எண்.XVI-ல் அளிக்கப்பட்டுள்ளன. |
| 3. | உடல்தகுதித் தேர்வு | இல்லை | உடல்தகுதித் தேர்வு தகுதித் தேர்வேயாகும்.<br>உடல்தகுதி முழுமையான விவரம் வரிசை எண்.XVII-ல் அளிக்கப்பட்டுள்ளன. |
| 4. | உடற்திறன் போட்டிகள் | 15 மதிப்பெண்கள் | உடற்திறன் போட்டிகள் விவரம் வரிசை எண்.XVIII-ல் முழுமையான விவரம் அளிக்கப்பட்டுள்ளன. |
| 5. | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள் | தேசிய மாணவர்படை சான்றிதழ் (NCC) - 2 மதிப்பெண்கள்<br>நாட்டு நலப்பணித் திட்டம் சான்றிதழ் (NSS) - 1 மதிப்பெண்<br>விளையாட்டு சான்றிதழ்(Sports/Games)- 2 மதிப்பெண்கள்<br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் மதிப்பெண் வழங்கும் விவரம் வரிசை எண்.XX-ல் மற்றும் முழுமையான விவரங்கள் தகவல் சிற்றேட்டிலும் அளிக்கப்பட்டுள்ளன. |
| | மொத்தம் | 100 மதிப்பெண்கள் | |

XIV **எழுத்துத் தேர்வு:**

a) பகுதி-அ பொது அறிவு - 50 மதிப்பெண்கள் (கொள்குறி வகை)
பகுதி-ஆ உளவியல் - 30 மதிப்பெண்கள் (கொள்குறி வகை)
எழுத்துத் தேர்வுக்கான நேரம் 1 மணி 20 நிமிடங்கள்.

b) எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும்.

XV. **உடல்கூறு அளத்தல். உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலுக்கு அழைத்தல் :**

i) விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாக குறைந்த பட்சம் 28 மதிப்பெண்கள் பெற்றாலும் விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 1:5 விண்ணப்பதாரர்கள் மட்டும் அடுத்தகட்ட தேர்வான, உடல்கூறு

அளத்தல். உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் ஆகியனவற்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

ii) உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் பெற்ற பெண் விண்ணப்பதாரர்கள் மகப்பேறு காலத்திலிருந்தால், அவர்கள் மகப்பேறு காலத்தில் இருப்பதாகவும் மற்றும் உடல்தகுதி மற்றும் உடல்திறன் போட்டிகளான ஓட்டம் மற்றும் நீளம் தாண்டுதல் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றவர் என்பதற்கான சான்றிதழை ஏதேனும் ஓர் அரசு மருத்துவ அதிகாரியிடம் பெற்று சமர்ப்பித்திடல் வேண்டும்.

XVI **உடற்கூறு அளவுகள்**:

**(a)ஆண்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | **உயரம்** | |
| | பொதுப் பிரிவினர் / பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | குறைந்த அளவு 170 செ.மீ |
| | ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்)/ பழங்குடியினர் | குறைந்த அளவு 167 செ.மீ |
| | **மார்பளவு** | |
| | சாதாரண நிலையில் குறைந்தபட்சம் | 81 செ.மீ |
| | (மூச்சை உள் வாங்கிய நிலையில் விரிவாக்கம் (Expansion) | 5 செ.மீ. (மூச்சை உள் வாங்கிய விரிவாக்க நிலையில் குறைந்த அளவு 86 செ.மீ.) |
| 2. | முன்னாள் இராணுவ, மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | உடற்கூறு அளத்தல் மற்றும் மார்பளவு அளத்தல் தேர்வு கிடையாது. |

**(b) பெண்கள்/ திருநங்கைகள்:**

| | |
|---|---|
| **உயரம்** | |
| பொதுப் பிரிவினர் / பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டடோர் (இஸ்லாமியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | குறைந்த அளவு 159 செ.மீ |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்)/ பழங்குடியினர் | குறைந்த அளவு 157 செ.மீ |

XVII **உடல்தகுதித் தேர்வு** :

| | | |
|---|---|---|
| i) | ஆண்கள் | 1500 மீட்டர் தூரத்தை 7 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும். |
| ii) | பெண்கள் மற்றும் திருநங்கைகள் | 400 மீட்டர் தூரத்தை 2 நிமிடம் 30 வினாடிகளில் ஓடி முடிக்க வேண்டும். |
| iii) | முன்னாள் இராணுவ, முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | 1500 மீட்டர் தூரத்தை 8 நிமிடங்களில் ஓடி முடிக்க வேண்டும். |

உடல்தகுதித் தேர்வில் தேர்வு பெறுபவர்கள் மட்டுமே, அடுத்த கட்டத் தேர்வான உடல்திறன் (Physical Efficiency Test) போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள். உடல்தகுதித் தேர்வில் தகுதி இழப்பவர்கள், தகுதி இழப்பு செய்யப்பட்டு போட்டித் தேர்விலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

XVIII **உடல்திறன் போட்டி**:

| | | |
|---|---|---|
| a) | **ஆண்கள்** | கயிறு ஏறுதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல், 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் |
| b) | பெண்/திருநங்கை | நீளம் தாண்டுதல், கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல், 100 மீட்டர் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் |
| c) | முன்னாள் இராணுவ, முன்னாள் மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் | குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் மற்றும் 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் |
| d) | இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைவரும் அவர்களுக்குரிய போட்டிகளில் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு நட்சத்திர திறன் பெறவேண்டும். | |
| e) | விண்ணப்பதாரர்கள் கலந்துகொள்ளும் உடல் திறன் போட்டிகள், நட்சத்திர திறன் மற்றும் மதிப்பெண்கள் விவரங்கள் முழுமையாக இக்குழும இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் அளிக்கப்பட்டுள்ளன. | |

XIX **அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் :**

உடல்திறன் போட்டிகளில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்கு அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் நடத்தப்படும். அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது கீழ்காணும் சான்றிதழ்கள் / ஆவணங்களை (தங்களுக்கு பொருந்துவன மட்டும்) சமர்ப்பித்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரர் தனது பெயரை பத்தாம் வகுப்பு கல்வித் தகுதிக்குப் பின்னர் மாற்றம் செய்து அவ்விவரத்தினை அரசிதழில் (Government Gazette) வெளியிட்டிருந்தால் அரசிதழின் முதல் பக்கம் மற்றும் பெயர் மாற்றம் செய்த விவரம் வெளியிடப்பட்ட பக்கத்தின் நகல்கள்.
2. பிறந்த தேதிக்கான சான்று (பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்).
3. கல்வித் தகுதிக்கான சான்று - 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்.
4. தமிழில் போதிய கல்வி கற்றதற்கான சான்றிதழ்.
5. சாதிச் சான்றிதழ் (தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வாழ்நாள் முழுவதற்கும் உரிய சான்றிதழ்).
6. ஆதரவற்ற விதவைக்கான சான்று
   (வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் பெறப்பட்டச் சான்று).
7. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான சான்றிதழ்.
8. தேசிய மாணவர் படை (N.C.C) சான்றிதழ்.
9. நாட்டு நலப் பணித்திட்டம் (N.S.S) சான்றிதழ்.
10. சிறப்பு மதிப்பெண்கள் பெறுவதற்கான விளையாட்டு சான்றிதழ்.
11. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் I
12. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் II
13. விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் அதற்கான சான்றிதழ் - படிவம் III
14. மேதகு இந்தியக் குடியரசு தலைவரிடமிருந்து பெற்ற சாரணர் (scout) சான்றிதழ்
15. திருநங்கைகள் நலவாரியத்திலிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை.

**குறிப்பு :** மேலே சொல்லப்பட்ட சான்றிதழ்களில் விண்ணப்பதாரர்கள் தனது வயது, கல்வி மற்றும் பிறதகுதிகளை நிருபிப்பதற்குரிய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யவில்லையெனில், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

XX **NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள்**:

உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் NCC, NSS மற்றும் Sports/Games ஆகியவற்றில் ஏதேனும் சான்றிதழ் பெற்றிருப்பின், அவர்களுக்குச் சிறப்பு மதிப்பெண்கள், உயர்அளவாக 5 மதிப்பெண்கள் (NCC- 2 marks, NSS -1 mark and Sports/Games - 2 marks) வழங்கப்படும். இணையவழி

விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யப்படும் சான்றிதழ்களுக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும்.

a) தகவல் சிற்றேட்டில் குறிப்பிட்டுள்ளபடி NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கு 5 சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும்).

b) NCC, NSS, Sports / Games சான்றிதழ்களை இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்விதம் பதிவேற்றம் செய்யாமல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது.

c) NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் உடல்திறன் போட்டியில் தேர்ச்சி பெற்ற பின்னரே வழங்கப்படும்.

d) NCC/NSS/Sports / Games-யில் ஒரே மதிப்பெண் தகுதியில் ஒரு விண்ணப்பதாரர் இரண்டு சான்றிதழ்கள் பெற்றிருக்கும் பட்சத்தில் ஒரு சான்றிதழுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.

XXI **இறுதி தற்காலிகத் தெரிவுப் பட்டியல்:**

a) எழுத்துத் தேர்வு, உடல்திறன் போட்டி மற்றும் NCC, NSS, Sports/Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட/மாநகர ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

b) இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரே தகுதி மதிப்பெண் பெற்றிருந்தால் பிறந்த தேதியின் அடிப்படையில் வயதில் மூத்தவருக்கு இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது முன்னுரிமை அளிக்கப்படும்.

c) இறுதியாகத் தற்காலிகமாக தெரிவு செய்யப்படுபவர்களின் பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணையதளமான www.tnusrbonline.org–ல் வெளியிடப்படும்.

XXII **மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் விசாரணை:**

இரண்டாம் நிலை காவலர்கள் (மாவட்ட / மாநகர மற்றும் ஆயுதப்படை), இரண்டாம் நிலை காவலர் (தமிழ்நாடு சிறப்புக் காவல் படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுபவர்கள், மருத்துவப் பரிசோதனைக்கும், முந்தைய பழக்க வழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் விசாரணைக்கும் காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலமாக உட்படுத்தப்படுவார்கள்.

XXIII **விபத்து:**

பல்வேறு நிகழ்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல் பாகங்களில் பாதிப்பு மற்றும் காயங்களுக்கு அரசோ, காவல்துறையோ, தேர்வுக் குழுமமோ பொறுப்பேற்காது.

XXIV **தேர்வுக் கட்டணம்** : **ரூ.130/-**

தேர்வுக் கட்டணத்தை இணையவழி செலுத்துதல் (online payment) முறையில் வலை வங்கி (Net banking)/ கடன் அட்டை (Credit Card)/ பற்று அட்டை (Debit Card) SBI வழியாகவும் மற்றும் இணையவழியில்லாமல் SBI e-challan மூலமாக SBI-யில் கட்டணம் செலுத்தலாம். தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறையில் வரைவுக் காசோலை, அஞ்சல் காசோலை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் அம்முறையில் பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

XXI **விண்ணப்பம் பதிவேற்றம் செய்தல்:**

விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலம் 08.03.2019 முதல் 08.04.2019 வரை விண்ணப்பத்தினைப் பதிவேற்றம் செய்யலாம்.

XXVI இவ்விளம்பரம் மற்றும் தகவல் சிற்றேடு இக்குழும www.tnusrbonline.org இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

XXVII **இத்தேர்வுக்கான முக்கிய நாட்கள்:**

| வ. எண். | விவரம் | நாள் |
|---|---|---|
| 1. | இணைய வழி விண்ணப்பம் பதிவேற்றம் தொடங்கும் நாள் | 08.03.2019 காலை 10.00 மணி முதல் |
| 2. | இணைய வழி விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் | 08.04.2019 |
| 3. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | பின்னர் அறிவிக்கப்படும். |

**உறுப்பினர் செயலாளர்,**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,**
**சென்னை - 8.**